Deposition of Witness
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, VANIYAMBADI.

Case No.CC.No.89/ 2019

**DEPOSITION OF PROSECUTION SIDE WITNESS No.7**

| | | | |
|---|---|---|---|
| Name: | சீனிவாசன் | Calling: | உதவி ஆய்வாளர் (ஓய்வு) |
| Father's Name: | வெங்கடசாமி | Religion: | |
| Village: | மோசூர் | Age: | 66 |
| Taluk: | பள்ளிப்பட்டு | | |

Solemnly affirmed in accordance with the provisions of Chapter X of Indian Evidence Act 1872 Dated : 23.03.2026.

(எதிரி ஆஜரில்லை. எதிரி தரப்பில் குவிமுச பிரிவு 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டது. மனு அனுமதிக்கப்பட்டது.)

அ.சா. 7 முதன்மை விசாரணை

நான் அம்பலூர் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணியாற்றி கடந்த 30.04.2018ம் வருடம் பணி ஓய்வு பெற்றேன். கடந்த 16.01.2017ம் தேதி 16.30 மணிக்கு நான் அம்பலூர் காவல் நிலையத்தில் பொறுப்பு அலுவலில் இருந்தபோது திருமதி. சத்யா, கிராம நிர்வாக அலுவலர், அம்பலூர் ராமநாயக்கன்பேட்டை (பொறுப்பு) அவர்கள் நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்து மூலமான புகாரை பெற்று அதன்தன்மைகேற்ப நிலைய குற்ற எண் 15/2017 சட்டப்பிரிவுகள் 294(பி), 353, 506(1) இதச கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். புகார் மனு ஏற்கனவே அசாஆ 1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. **முதல் தகவல் அறிக்கை அசாஆ 4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** புகார் மனுவின் அசலை முதல் தகவல் அறிக்கையுடன் இணைத்து நீதிமன்றத்திற்கு அனுப்பினேன்.

பின்னர் நானே வழக்கை புலன் விசாரணைக்கு எடுத்து கொண்டு சம்பவயிடம் சென்று 16.01.2017, மாலை 17.00 மணிக்கு சம்பவயிடமான ராமநாயக்கன்பேட்டை ஊராட்சி அலுவலகம் முன்பு சென்று பார்வையிட்டு சாட்சிகள் தட்சிணாமூர்த்தி, பார்த்தசாரதி ஆகியோர் முன்னிலையில் பார்வை மகசர், மாதிரி வரைபடம் தயார் செய்தேன். **பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் அசாஆ 5 மற்றும் அசாஆ 6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

எதிரியை கைது செய்யவேண்டி உதவி ஆய்வாளராகிய நானும், சிறப்பு உதவி ஆய்வாளராகிய திரு.தயாளனுடன் சென்றபோது அதே நாள் 18.00 மணிக்கு ராமநாயக்கன்பேட்டை தண்ணீர் மேல் தொட்டியிடம் நின்று கொண்டிருந்த எதிரி சரவணனை முறைப்படி கைது செய்து கைது செய்த விவரத்தை உறவினர்களுக்கு தகவல் தெரிவித்து அதற்குண்டான ஆவணங்களின் நகல்களை எதிரிக்கு அளித்து தக்க வழிக்காவல் மூலம் நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினேன். பின்னர் சாட்சிகள் சத்யா, சிறப்பு உதவி ஆய்வாளர் கோதண்டம், தலைமை காவலர் 1926 குமார், பழனி, சிறப்பு உதவி ஆய்வாளர் திரு.தயாளன் மற்றும் மகசர் சாட்சிகள் ஆகியவர்களை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். எனது புலன் விசாரணையை முடித்து எதிரி மீது குற்றம் உண்மையென தெரியவந்ததால் எதிரி மீது 294(பி), 353, 506(1) இதச இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன். எனது விசாரணையில் சாட்சிகள் அனைவரும் குவிமுச பிரிவு 161(3) ன் படி வாக்குமூலத்தில் உள்ளதை போல் தான் சொன்னார்கள்.

எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை

புகார்தாரர் அளித்த புகாரில் அடித்தல், திருத்தல், இடைசெருகல் உள்ளது என்றால் இடைசெருகல் உள்ளது. சம்பவம் நடந்த இடம் கிராம நிர்வாக அலுவலகம் அருகில் என்றால் இல்லை, ஊராட்சி மன்ற அலுவலகத்தின் அருகில். சம்பவ இடத்திற்கும் கிராம நிர்வாக அலுவலகத்திற்கும் இடையில் எவ்வளவு தொலைவு என்றால் சுமார் 25 அடி இருக்கும். சம்பவ இடத்தில் சம்பவ நேரத்தில் சுமார் 500, 1000 நபர்கள் இருந்திருப்பார்களா என்றால் இருந்திருப்பார்கள். அந்த 500, 1000 நபர்களில் யாரும் என்னிடம் புகார் கொடுக்கவில்லை என்றால் சரிதான். சம்பவம் நடந்த நாள் அரசு பொது விடுமுறை என்றாலும், கூடுதல் பொறுப்புக்காக இராமநாயக்கன் பேட்டை சென்றதாக சொல்லியுள்ளார் என்றால் சரிதான். கிராம நிர்வாக அலுவலர் சம்பவ இடத்திற்கு செல்வதற்கு மேலதிகாரியின்

உத்தரவோ, அனுமதி கடிதமோ இவ்வழக்கில் பெறப்பட்டதா என்றால் வாய்மொழி உத்தரவு கிடைத்ததாக கூறினார். இவ்வழக்கில் கிராம நிர்வாக அலுவலரின் உயர் அதிகாரி யாரையாவது விசாரித்து வாக்குமூலம் பெற்றுள்ளேனா என்றால் இல்லை.

அந்த இடத்தில் எருது விடுவதற்கு எங்களிடம் அனுமதி பெறப்பட்டதா என்றால் இல்லை. அந்த இடத்தில் சம்பவ நேரத்தில் சுமார் எத்தனை மாடுகள் இருந்தது என்றால் அது குறித்து எனக்கு தெரியாது, சிறப்பு உதவி ஆய்வாளருக்கு தான் தெரியும். சிறப்பு உதவி ஆய்வாளரிடம் எத்தனை மாடுகள் இருந்தது என விசாரித்தேனா என்றால் இல்லை. சம்பவம் குறித்து போலிசார் யாரேனும் புகார் கொடுத்தார்களா என்றால் இல்லை. போலிசார் அந்த இடத்திற்கு சென்றதற்காக பொது நாட்குறிப்பில் குறித்துள்ளார்களா என்றால் குறிப்பிட்டுள்ளார்கள். பொது நாட்குறிப்பின் நகலை இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. பொது நாட்குறிப்பின் நகலை பார்த்தால் தான் போலிசார் அந்த இடத்திற்கு சென்றார்களா என தெரியவரும் என்றால் அது அவசியமில்லை. இவ்வழக்கில் ப.சா.2 மற்றும் ப.சா.3 காவல் துறையை சார்ந்தவர்கள் என்றால் சரிதான். வரைபடத்தில் கிராம நிர்வாக அலுவலகம் 25 அடி தொலைவில் உள்ளதை குறிப்பிட்டுள்ளேனா என்றால் இல்லை. ஊராட்சி மன்ற அலுவலகம் அருகில் சம்பவம் நடந்ததாக குறிப்பிட்டுள்ள நிலையில் ஊராட்சி மன்ற அலுவலரையோ, செயலாளரையோ விசாரித்து வாக்குமூலம் பெற்று இவ்வழக்கில் சாட்சியாக சேர்த்துள்ளேனா என்றால் இல்லை. அந்த ஊர் முக்கியஸ்தர்கள் யாரையாவது விசாரித்து வாக்குமூலம் பெற்றுள்ளேனா என்றால் பழனி என்பவரை விசாரித்துள்ளேன். மேற்படி பழனி அந்த ஊரிலே இல்லை என காவல் துறையினரை சேர்ந்தவர்கள் கிராம நிர்வாக அலுவலரிடம் சான்றிதழ் வாங்கி சமர்பித்துள்ளனர் என்றால் சம்பவம் நடந்த தேதியில் அவர் அந்த ஊரில் தான் இருந்தார்.

அ.சா.1 நான் காவல் நிலையத்தில் புகார் அளிக்கவில்லை என்று நீதிமன்றத்தில் சாட்சியமளித்துள்ளார் என்றால் அது குறித்து தெரியாது. நான் காவல் நிலையத்தில் புகார் அளித்தேன் என குறிப்பிட்டுள்ளது என சாட்சியமளித்துள்ளார் என்றால் சரியல்ல. அ.சா.2 குமார், தலைமை காவலர் நாங்கள் சென்ற போது அங்கு எருது விடும் திருவிழா எதுவும் நடைபெறவில்லை என சாட்சியமளித்துள்ளார் என்றால் சரியல்ல. அ.சா.2 குமார், தலைமை காவலர் அவரது சாட்சியத்தில் ஊர்மக்கள் நாங்கள் எருது

எதுவும் விடவில்லை, எங்களை ஏன் தடுக்கிறீர்கள் என கேள்வி கேட்டதாகவும், எங்கள் பணியினை தடுத்ததாக புகார் கூறியிருக்கும் நிலையில் நாங்கள் ஏதாவது அவ்வாறு புகார் அளித்தோமா என்றால் இல்லை என சாட்சியமளித்துள்ளார் என்றால் சரியல்ல. அ.சா.3 தயாளன், சிறப்பு உதவி ஆய்வளார் எதிரி காவல் துறையை சார்ந்தவர்களையோ, கிராம நிர்வாக அலுவலரையோ, பொதுமக்கள் யாரையும் குறிப்பிட்டு அசிங்கமாக பேசவில்லை என சாட்சியமளித்துள்ளார் என்றால் சரியல்ல. அ.சா.4 எங்களுக்கு சம்பவம் நடந்தது பற்றி தெரியாது, வழக்கு விவரம் எதுவும் தெரியாது என சாட்சியமளித்துள்ளார் என்றால் சரியல்ல. அ.சா.5 கோதண்டம் பொது இடத்தில் எதிரி பொதுவாக திட்டிக்கொண்டிருந்தார் என்றால் இல்லை என சாட்சியமளித்துள்ளார் என்றால் சரியல்ல.

அவ்வாறு ஒரு சம்பவமே நடைபெறவில்லை என்றாலும், அ.சா.1 அரசு ஊழியர் என்பதாலும், அவருக்கு சாதகமாக புள்ளியியல் காரணத்திற்காக வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் சம்பவயிடத்திற்கு செல்லவில்லை, சாட்சிகளை விசாரிக்கவில்லை, வழக்காவணங்கள் அனைத்தும் காவல்நிலையத்தில் வைத்து தயாரித்துக்கொண்டேன் என்று சொன்னால் அது சரியல்ல. நான் இவ்வழக்கில் சரிவர புலன் விசாரணையை மேற்கொள்ளாமல் தவறான இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. அ.சா.1 மற்றும் அ.சா.2, அ.சா.3, அ.சா.5 ஆகிய நபர்கள் அரசு ஊழியர்கள் என்பதால் அவர்களுக்கு சாதகமாக இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. வழக்கிற்கும் எதிரிக்கும் எவ்வித சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

சாட்சி கையொப்பம்
(ஒம்.) சீனிவாசன்

SRIPATHI K — Digitally signed by SRIPATHI K